Deposition of witness

(Chapter XXII Code of Criminal Procedure)

கிருஷ்ணகிரி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரி

| அமர்வு வழக்கு எண். | SC.No. 197 of 2019 | அரசு தரப்பு | அ.சா.5 |
|---|---|---|---|
| பெயர் | திரு. சக்திவேல் (கிராம நிர்வாக உதவியாளர்) | எதிரி தரப்பு | |
| தகப்பனார் பெயர் | | வயது | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 of 14th day of October 2024.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஒன்னக்கரை கிராம நிர்வாக அலுவலரின் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.06.2001 அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் விடுதலை சிறுத்தை தலைவர் திருமாவளவனை கைது செய்திருந்தார்கள். அதனால் செங்கத்திலிருந்து கல்லாவி வழியாக கிருஷ்ணகிரி வந்த எஸ்.எம்.பி.எஸ். தனியார் பஸ்ஸை TCD-1771 விடுதலை சிறுத்தை கட்சியினர் பயணிகளை இறக்கிவிட்டுவிட்டு பெட்ரோல் குண்டு போட்டு பஸ்ஸை தீவைத்து கொளுத்திவிட்டார்கள் என கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் வந்தது, மறுநாள் அதாவது 26.06.2001 அன்று காலை 6.00 மணிக்கு நானும், கிராம நிர்வாக அலுவலரும், கல்லாவி காவல் நிலைய, காவல் ஆய்வாளருடன் சம்பவ இடத்திற்கு சென்றோம். எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு எழுதி வரைந்துக்கொண்டார், அந்த மகசரில் நானும், கிராம நிர்வாக அலுவலரும் சாட்சிகளாக கையொப்பம் போட்டுக்கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் 2வதாக கண்டிருப்பது என்னுடைய கையொப்பம் தான். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட வேண்டுகிறேன். பின்னர் 28.06.2001 அன்று மாலை 5.00 மணியளவில் கும்மனூர் சாலை பிரிவில் பர்குணன் த/பெ. பெரியசாமி என்பவரை காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைது செய்து விசாரித்து,

வாக்குமூலம் வாங்கினார். அவரிடமிருந்து ஏதோ எரிந்து போன சட்டையை கைப்பற்றியதாக ஞாபகம் ஆனால் சரியாக ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் 2வது கண்டிருப்பது என்னுடைய கையொப்பம் தான். ஆனால் அதுபற்றி சரியாக ஞாபகமில்லை. சட்டை ஏதோ கைப்பற்றியதாக ஞாபகம். சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்துக்கொள்ளப்பட்டது. இதுகுறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என கூறப்பட்டது.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA
Digitally signed by M SUMATHI SAI PRIYA

Principal Sessions Judge,
Krishnagiri.